RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt224s247

OPEN ACCESS

# ஐரோப்பிய பகுத்தறிவுவாத நோக்கில் திருக்குறளில் உலகாயதக் கருத்துக்கள்

ஆ. முத்துலெட்சுமி [அ, *]

[அ] தமிழ்த்துறை, அருள் ஆனந்தர் கல்லூரி, கருமாத்தூர், மதுரை-625514, தமிழ்நாடு, இந்தியா

# The Universal Views in Thirukkural from the Point of View of European Rationalism

**A. Muthulakshmi [a, *]**

[a] Department of Tamil, Arul Anandar College, Karumathur, Madurai-625514, Tamil Nadu, India

* Corresponding Author: muthu.tamilphd@gmail.com

Received: 30-08-2022
Revised: 30-10-2022
Accepted: 07-11-2022
Published: 15-12-2022

Check for updates

**ABSTRACT**

The Vedas, which are regarded as dominating the Indian philosophical tradition, speak of an illusory nature in their conceptions of the world. The universal philosophies emerged and developed to be based on the world and to ignore the idea of God. They are dependency, materialism, Buddhism, and Jainism. These philosophies make human beings aware of an intelligent life based primarily on the world. In European philosophies, post-Enlightenment ideas ignored the conceptions of God by the ancient Greek philosophers Plato and Aristotle, who claimed that their thinking was flawed and that only worldly truths should be taken first. Rationalism puts knowledge first. Ignored the usual religious views. The rationalist tradition and the Indian materialistic tradition prioritize knowledge. On that basis, Thirukkural was regarded as a mixed copy of Tamil when it was created. Though people of different religions claim that Thirukkural is based on their views, it can be seen that they put worldly life first, with knowledge as the foremost priority. This article proves that Thirukkural, which focuses on the material life of man, is rich in rational and universal concepts.

**Keywords:** Thirukkural, Materialism, European Rationalism, Plato

## முன்னுரை

வேத வைதீக நெறிகளுக்கு மாறானதாக விளங்குவது லோகாயத நெறியாகும். இதன் அடிப்படை அளவையியல் விதிகளுக்கு உட்பட்டு இயங்குவதாகும். உலகு பற்றியும் ஆன்மா பற்றியும் வேத சமயங்கள் கொண்டிருக்கும் கொள்கைகளுக்கு முரணானதாக லோகாயதம் காணப்படுகிறது. இந்தியச் சமய நெறிகள் பலவற்றில் கடவுள் கொள்கையை மறுத்து எழுந்த சமயங்கள் என்று சமண, பௌத்த சமயங்கள் குறிப்பிடப்படுகின்றன. இவை இரண்டிலும் பிற்காலத்தில் வேதக் கலப்புகள் நிகழ்ந்து விட்டன என்ற போதிலும் அதன் மூலக் கொள்கைகளில் உலகாயத நெறியே காணப்பட்டது. சமணமான தமிழரின் அறிவு நெறியில் மிகுந்த தாக்கத்தை ஏற்படுத்திய சமயமாகும். களப்பிரர் காலத்தில் தமிழகத்தில் பரவியதாகக் கூறப்படும் இச்சமயத்தைச் சார்ந்தவர்களே பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள் பலவற்றை இயற்றினார்கள் என்று கூறப்படுகிறது. பல்வேறு சமயத்தவரும் தம் கொள்கையே திருக்குறளில் கோலோச்சுகிறது என்று கூறினாலும் திருவள்ளுவம் எச்சமயத்தையும் சாராத தன்மையே கொண்டிருக்கிறது. உலகியல் வாழ்விற்கே முதன்மை அளிக்கும் வகையில் அதன் கருத்துக்கள் காணப்படுகின்றன. தமிழரின் சிந்தனை மரபில் லோகாயதக் கருத்துக்களின் களம் பரந்து

விரிந்து காணப்படுகிறது. சங்க காலத்திலிருந்து சமண, பௌத்த நெறிகளின் கருத்துக்கள் பரவியிருந்த நிலையில் ஆசீவகம், சார்வாகம், லோகாயதம் என்னும் மூன்றும் உலகியல் நெறிகளாகக் கூறப்படுவனவாகும். மெய்யியல் என்பது காட்சி நெறி என்று கூறப்படுகிறது. திருக்குறளின் எப்பொருள் யார் யார் வாய் கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பது அறிவு என்று கூறுகிறது. காண்பதுதான் அறிவு என்ற அடிப்படையில் உலகியல் சார்ந்தவற்றிற்கே முதன்மையளிப்பதையும் அதுதான் உண்மை என்றும் கூறுவதைக் காணமுடிகிறது. அது போல பின்அறிவொளிக்கால ஐரோப்பிய சிந்தனை மரபானது உலகிற்கு முதன்மை அளித்து கடவுளைப் புறந்தள்ளும் கருத்துக்களை வெளிப்படுத்தின. பிரான்சிஸ் பேக்கன் முதல் ஹெகல், மார்க்ஸ் வரையிலான சிந்தனையாளர்கள் உலகு பற்றிய கருத்தாக்கங்களையே முதன்மையாகக் கொண்டனர். இந்த அடிப்படையில் இக்கட்டுரை திருக்குறளில் உலகாயதக் கருத்துக்கள் இருப்பதை வெளிப்படுத்தும் வகையில் அமைகிறது.

## உலகாயதம்

உலகம் என்பது பூமியின் ஐந்து முதன்மையான தனிமங்களையும் அவற்றின் கலப்பால் உருவாகும் உலகப் பொருட்களையும் குறித்து நிற்கிறது. உலகையும் உலகில் உள்ள பொருட்களையும் உணர்த்துவதால் அவற்றைப் பற்றியது என்னும் பொருளில் உலகாயதம் என்ற சொல் தமிழில் பயன்படுத்தப்படுகிறது. சங்க இலக்கியங்களில் இச்சொல் பயன்படுத்தப்படவில்லை. ஆனால் காப்பியங்களில் இச்சொல் பயின்று வருகிறது. பூதவாதம் என்ற சொல்லாலும் குறிப்பிடப்படுகிறது. "மணிமேகலையில் பூதவாதம், உலோகாயதம் என்ற இரு சொற்களும் சடப்பொருள் உண்மை வாதத்தினை குறிக்கப்பயன்படுத்தப் பெற்றுள்ளன." என்று குறிப்பிடுகிறார் கந்தசாமி (Kandasamy, 2005). தமிழிலக்கியத்தில் லோயகயதர்களுடனான வாதம் புரிதல் நீலகேசியிலும் குறிப்பிடப்படுகிறது. உலகாயதம் என்ற சொல் வடமொழியினின்றும் வந்ததெனக் கூறப்படுகிறது. சர்வதரிசன சங்கிரகத்தில் மாவதவாச்சாரியார் லோகாயதா என்ற சொல்லைப் பயன்படுத்தியுள்ளதாகக் கூறப்படுகிறது. "இந்தியத் தத்துவம் பற்றி மத்திய காலத்தில் எழுந்த நூலான சர்வ தரிசன சங்கிரகத்தில் (மாதவாச்சாரியார் இயற்றியது. 14ஆம் நூற்றாண்டு) மொழிபெயர்த்த ஈ. பிகொவெல் இந்த சொல் மூலத்தை ஏற்றுக் கொண்டார்" என்று குறிப்பிடுகிறார் தேவிபிரசாத் சட்டோபாத்யாயா (Vasanthakumar, 2010). உலகாயுதம் என்பது மக்களிடையே பரவியிருந்தது என்று பொருள்படுகிறது. சடப்பொருள் உண்மை என்றும். புலனுணர்வால் அறியப்படுவது என்றும் இதனை விளங்கலாம். உலகாயதர் என்போர் பொருள்சார் உலகத்தை மட்டுமே உண்மை எனக் கொள்பவர்கள் எனலாம். "பொருள்சார் உலகத்தை (லோகம்) அடிப்படையாகக் கொண்ட தத்துவம் என்று கூறப்படுகிறது. இந்த உலகம் பற்றிய பொருள்முதல்வாதத் தத்துவம்" என்றும் குறிப்பிடப்படுகிறது (Vasanthakumar, 2010). டாக்டர் இராதாகிருஷ்ணன் உலகாயதம் என்பதை புலன்சார் உலகு பற்றியது என்று குறிப்பிடுகிறார். தாஸ்குப்தா மக்களிடையே உள்ள அனைத்து சாருவாகக் கோட்பாடுகளையும் குறிப்பிடுகிறது என்கிறார். சமண சமயத்தின் பதார்த்த சாரம் என்பது உலகாயதம் என்பதைக் குறித்து நிற்கிறது. இவற்றிலிருந்து உலகாயதம் என்பதை புலனுணர்வுக் காட்சியினால் விளங்கிக் கொள்வது என்பதை அறியலாம். நாத்திகக் கொள்கைக்கும் உலகாயதத்துக்குமான தொடர்பினை குறித்துக் கூறும் போது "இந்திய நாத்திகர்கள் கடவுள் நம்பிக்கை என்பது தவறான குதர்க்கவாத சிந்தனையின் சில வடிவங்களில் மட்டுமே வேரூன்றிப் போன விசயம் என்று நிறுவ விழைந்தார்கள். இதன் பொருள் யாதெனில் அவர்களைப் பொறுத்தமட்டில் புற உலகு என்னும் யதார்த்தத்தை கணக்கில் கொள்ளும் போது கடவுள் என்பது ஒரு மாயை. அக உணர்வு காரணமாக நேரும் கோளாறு" என்று குறிப்பிடுவதிலிருந்து இதனை அறிந்து கொள்ளலாம். நாத்திகக் கொள்கையும் சார்வாகக் கொள்கையும், சாங்கியமும் கூட புறஉலகையே முதன்மைப்படுத்தின. சாங்கியம் புருடன் பிரகிருதி என்பதற்கு மூலம் என்பதாகவே பொருள் கொள்ள முடிகிறது. மூலம் என்பது உலகின் தோற்றத்தைப் பற்றிய சிந்தனையாக முடியும். அது பெருவெடிப்புத் தத்துவத்தை அடிப்படையாகக் கொண்டது. இந்தியாவில் உலகாயுதமும், நாத்திகமும் மக்களிடையே சிந்தனை முறைகளாக வளர்ச்சி பெற்று வந்தவையாக இருக்கின்றன.

## ஐரோப்பிய பகுத்தறிவு வாதம்

இந்தியத் தத்தவச் சிந்தனைகள் வேதத்தை அடிப்படையாகக் கொண்டது என்னும் வழக்கமான சொல்லாடல்களை தற்கால அறிஞர்கள் புறந்தள்ளுகின்றனர். வளமான மனிதத்துவச் சிந்தனைகளை உள்ளடக்கியதாக இந்தியத் தத்துவஞானம் செழித்து வளர்ந்தது. இந்தியாவில் பழங்காலத்திலேயே உலகாயதச் சிந்தனைகள் தோற்றம் பெற்று விட்டன. ஐரோப்பிய மரபில் சாக்ரடீஸ் காலந்தொட்டு உலகை வியாக்கியானம் செய்யும் மரபு இருந்து வருகிறது. உலக வாழ்விற்கே முதன்மை அளிக்கும் எபிக்கூரஸ் பற்றிய சிந்தனைகள் படிப்படியாக வளர்ச்சி பெற்று பின்அறிவொளிக்காலச் சூழலில் சமயத்தை புறந்தள்ளி மனிதத்துவத்தை முன்னிறுத்தும் சிந்தனைகள் உருப்பெற்றன. பிரான்சிஸ் பேக்கன், இம்மானுவல் காண்ட், தெகாத்தே, டேவிட் ஹ்யூம், ஹூஸ்ஸீர்ல், காடமர் போன்ற எண்ணற்ற தத்துவவாதிகளின் சிந்தனைகள் பண்டைய சிந்தனைகளை மேலும் வளப்படுத்தின எனக் காணமுடிகிறது. பிரான்சிஸ் பேக்கன் உலகு பற்றிய கருத்தினை "உண்மை மனிதனின் உள்ளத்தில் உள்ளது. வெளியிலா இருந்து வருவதில்லை. புற உலகத்தைக் கூர்ந்து கவனித்தலுக்குப் பதிலாக எண்ணத்தை உள்முகமாகத் திருப்பி உன்னுடைய குருட்டுத் தனமான குழப்பமான போலி கற்பனைகளுக்கு முன் மண்டியிட்டுக் கிடக்க வேண்டும்" என்ற கூற்றானது மதம் பற்றிய அவருடைய தெளிந்த கருத்தாக அமைகிறது (Vasanthakumar, 2010). புறவயமான உண்மையையே உணர்ந்து கொள்ள வேண்டுமேயன்றி பிற உலகங்கள் பற்றிய மூடத்தனமான சிந்தனைகளுக்கு இடம் தருதல் மனித வளர்ச்சிக்குப் புறம்பானது என்று கூறினார். இவரை அடியொற்றி டெகார்ட்டே அறிவுவாதத்தினை முன் வைத்தார் எனக் காணமுடிகிறது. "எந்த அளவுக்கு எனக்கு நான் கல்வி புகட்டிக் கொள்கிறேனோ அந்த அளவுக்கு நான் அறியாமையில் மூழ்கியிருப்பதைக் கண்டறிகிறேன் என்றால் அதற்குக் காரணம் பல்வேறு ஐயப்பாடுகளும் தவறுகளும் என்னை அலைக்கழிக்கின்றன" என்று டெகார்ட்டே தனது நூலில் குறிப்பிட்டுள்ளதை எஸ்.வி. ராஜதுரை எடுத்துரைக்கிறார் (Rajadurai, 2011). இறைவன், உலகம், மனிதன் என்னும் மூன்று பற்றியும் கருத்துரைத்த டெகார்ட்டே மனிதனின் வாழ்வே அவனது இருப்பு என்றார். இறைவனை தேவையின்றி பேசுதல் கூடாது என்னும் கருத்தினைக் கொண்டிருந்தார். இறைவன் பற்றிய கருத்தாக்கத்தினைக் கொண்டிருந்தாலும் இறைவனுக்கும் உலகுக்கும் தொடர்பிருப்பதாக அவர் கருதவில்லை. எல்லாவற்றையும் ஐயுறும் வாதத்தினை முன் வைத்தார். அவர் கடவுள் கருத்தை ஏற்றுக் கொண்டதற்கு அவர் காலத்தில் நிலவிய அரசியல் சூழலே காரணம் எனப்படுகிறது. கோபர்நிக்கஸின் பூமி சூரியனைச் சுற்றுகிறது என்ற கருத்தினை வெளிப்படுத்திய கலிலியோவுக்கு நேர்ந்த கதியினைப் பற்றி அறிந்தவர்தான் எனவே அறிவுவாதத்தை முன் வைத்தாலும் கடவுள் கருத்தினையும் கொண்டிருந்தார் என அறியமுடிகிறது. வரலாற்றில் அறிவுவாதமே கடவுளை விலக்கி விட்டு மனிதனுக்கு முதன்மை அளிக்கிறது என்னும் கருத்தினை ஐரோப்பிய தத்துவ மரபு கொண்டிருந்ததாக எஸ்.வி. ராஜதுரை கூறுகிறார். "அறிவுவாதம் கடவுளைப் பீடத்திலிருந்து இறக்கிவிட்டுத் தானே அரியணை ஏறிக் கொண்டது. இந்த அறிவைப் போற்றியவர்கள் அறிவுதான் வரலாற்றில் ஆதிக்கம் செலுத்துகிறது என்றார்கள். தாங்கள் மனம் வைத்தால் வரலாற்றையே ஒழித்துக் கட்டி விட முடியும் என்றும் கருதினார்கள்." (Rajadurai, 2011). தெகார்த்தேயின் மரபிலிருந்து அறிவு மேலும் முன்னேற்றப் பாதைக்குக் கொண்டு சென்றவர் ஹெகல் ஆவார். இயங்கியல் முறையில் கருத்துக்கள் ஒன்றையொன்று எதிர்த்து புதிய கருத்துக்கள் தோன்றுகின்றன என்றார். இவரை அடியொற்றியே பொருள்முதல்வாதக் கருத்தினை கார்ல் மார்க்ஸ் வெளிப்படுத்தினார். இந்தத் தத்துவவாதிகள் அனைவரும் சுயம், உலகு, மனம் என்பது பற்றிய புறவய மெய்மைகளையே உண்மையென தர்க்க முறையில் நிறுவினர். அதன் அடிப்படையிலேயே உலகு பற்றிய கருத்தாக்கங்களை கடவுள் கருத்தை நிராகரித்து வெளிப்படுத்தினர் எனக் காணமுடிகிறது.

## உலகாயதமும் ஐரோப்பிய பகுத்தறிவும்

இந்தியாவில் தோன்றிய சார்வாகம், பௌத்தம், சமணம் போன்ற தத்துவங்கள் கடவுளுக்கு முதன்மை அளிக்கவில்லை. உலகிற்கே முதன்மை அளித்தன எனக் காணமுடிகிறது. அதே அடிப்படையில்தான் ஐரோப்பிய பகுத்தறிவுவாதம் உலகிற்கே முதன்மை அளிக்கிறது. கடவுள் கருத்தை

புறக்கணிக்கிறது. இந்தப் பின்னணியில் தமிழ் இலக்கியங்களில் பழமையான மணிமேகலை, சீவக சிந்தாமணி, குண்டலகேசி, நீலகேசி ஆகியன தத்துவ விசாரணையில் இறங்குகின்றன. உலகே உண்மை என்பதை உணர்த்துகின்றன. திருக்குறளின் கருத்துக்கள் உலகுக்கு அப்பாலான கடவுள் கருத்தினை சில குறட்பாக்களில் கொண்டுள்ளன என்ற போதிலும் கற்பனைக்கு அப்பாற்ப்பட்டதாக அதனை விரிக்கவில்லை. மாறாக மனிதன் அறவாழ்வை மேற்கொள்ளும் போது உலகிறந்த செயல்கள் நடைபெறுவதாக உணர்த்துகிறார்.

## தமிழ் இலக்கியங்களும் உலகாயதமும்

தமிழில் சங்க இலக்கியங்களைப் பொதுவாக சமயஞ்சாராத இலக்கியங்கள் என்று குறிப்பிடுவது வழக்கமாகும். கடவுளர் பற்றிய சிந்தனைகள் சங்க இலக்கியத்தில் காணப்பட்டாலும் அவற்றின் வைதீக சமய நெறியாளர்களின் தாக்கத்தால் விளைந்தது என்றே அறிஞர்கள் குறிப்பிடுகின்றனர். அந்த வகையில் காப்பியங்களும் சமண, பௌத்த சமயங்களின் தத்துவத்தையே பிரதிபலிக்கின்றன. ஆன்மக் கோட்பாட்டை சமணம் ஏற்றாலும் பௌத்தம், சமணம் இரண்டும் சிரவண மதங்கள் என்றே அழைக்கப்படுகின்றன. அடிப்படையில் இம்மதங்கள் இறைமயப்படுத்தலுக்குப் பதிலாக அறமயப்படுத்தும் போக்கை உடையன என அ. மார்க்ஸ் குறிப்பிடுவார். இறைமயப்படுத்துதல் என்பது சொர்க்கம், நரகம் என்னும் இருமைகளை ஏற்படுத்துதல் ஆகும். அறமயப்படுத்துதல் என்பது அறம் தண்டிக்கும் என்று கூறுவதாகும். பிறவி, கடவுள், கர்மம், ஆன்மா போன்றவற்றினை ஹீனயான பௌத்தம் ஏற்பதில்லை. அது ஒரு வகையில் உலகை மட்டுமே பிரத்தியட்சமாக நம்புகிறது. சமணமும் அவ்வாறே பதார்த்தங்கள் என்று குறிப்பிடுவதை மட்டுமே நம்புகிறது. புலனுணர்வுக் காட்சியினால் காண்பதை மட்டுமே ஏற்றுக் கொள்ள வேண்டும் என தமிழ்த் தத்துவ மரபு குறிப்பிடுவதைக் காணலாம்.

சமணர்கள், பௌத்தர்களால் தமிழ் இலக்கியங்கள் தொடக்க காலத்தில் வளர்ச்சியடைந்துள்ளன. அதில் அற இலக்கியங்கள் யாவும் களப்பிரர் காலத்தில் தோன்றியவை எனக் கூறப்படுகின்றன. வேத, வைதீகச் சமயங்கள் ஒடுங்கியிருந்த காலமாகவும் இதனைக் குறிப்பிடுவது வழக்கமாகும். உலகு பற்றிய உண்மைகளை எடுத்துரைப்பனவாக அற இலக்கியங்கள் காணப்படுகின்றன. உலகையும் உலகில் வாழும் மனிதர்களையும் அறம் சார்ந்து பக்குவப்படுத்துதல் என்பதை நோக்கமாகக் கொண்டவை.

## திருக்குறளும் உலகாயதமும்

தமிழில் அனைத்துச் சமயத்தினரும் சொந்தம் கொண்டாடும் நூலாக விளங்குவது திருக்குறள் ஆகும். அனைத்திற்கும் அதில் இடம் உண்டு என்பதே அதன் தனிச்சிறப்பாக அமைகிறது. கடவுள் கொள்கைகள் என்பதல்ல. ஒவ்வொரு சமயக் கருத்துக்களின் சாரமாகவும் திருக்குறளைக் காணலாம். உலகாயதம் என்பதை உலகு சார்ந்த சடப்பொருள் உண்மை எனக் கொண்டால் திருக்குறளில் கூறப்படும் கருத்துக்கள் பல உலகாயத நோக்கினை வெளிப்படுத்துவனவாகும். மெய்யியல் என்பதை காட்சி நெறியியல் என்று அழைப்பது வழக்கமாகும். அத்தகைய காட்சியை அறிவுடைமை அதிகாரத்தில் காண்பது அறிவு என்று கூறுவதன் மூலம் அறியலாம். அறியப்படுவது என்பது புறவுலகில் அறியப்படுவதே அறிவு என்னும் பொருளாக அமைகிறது. “அறிவுடைமை என்னும் அதிகாரத்தில் சொல்லப்படும் அறிவு மூன்று அறிவுகளின் முதிர்ச்சி நிலையில் உள்ள உலக அறிவை நுட்பமாக விரிக்கிறது. இதை வள்ளுவர் எவ்வதுறைவது உலகம் உலகத்தோடு அவ்வதுறைவது அறிவு என்று குறிப்பிடுகிறார். இதைப் போலவே உலகை அறிந்து நடப்பதே சிறந்த அறிவு” என்று குறிப்பிடுவதன் வழி அறியலாம் (Makendran, 2019). உலகை அறிதல் என்பது புறவுலகை அறிதல் ஆகும். இதுவே சடப்பொருள் உண்மை எனக் கொள்ளப்படுகிறது.

நிலம் விளைய வேண்டுமானால் நீர் வேண்டும். நீர் இன்றி உலகும் அமையாது என்று புறநானூறு கூறுவதையும் உணவென்பது நிலத்தொடு நீரே என்று கூறுவதையும் காணும் போது மனிதர் வாழ்விற்கு இன்றியமையாதனவாக இருப்பது உலகில் இருந்தே கிடைக்கக் கூடியதாகும்.

இதைத்தான் சுழன்றும் ஏர்பின்னது உலகும் உழந்தும் உழவே தலை என்ற குறள் குறிப்பிடுகிறது. ஏரினால்தான் உலகம் வாழ்கிறது என்பதில் வேறு கருத்து ஏதேனும் இருக்க முடியுமானால் இயற்கை இகந்த எந்த ஒன்றினாலும் உலகம் வாழவில்லை என்பது பொருளாகிறது. பிறவிப் பெருங்கடல் நீந்துவார் துறந்தார்க்கு இல்வாழ்வான் துணை (குறள்.52) என்னும் குறளில் துறந்தவர் என்னும் சொல்லுக்கு வணத்தையும் நாமத்தையும் துறந்தவர் என்று பொருள் கொள்கிறார் மணக்குடவர். வருணம் என்பது சாதி, நாமம் என்பது பெயர் ஒருவர் தான் உயர்வு தாழ்வற்ற நிலைக்குச் செல்வதே துறத்தல் எனக் கூறப்படுகிறது. அவர்க்கு இல்வாழ்வான் துணை என்று கூறுவதன் மூலம் இல்வாழ்வான் என்பான் உலகியல் வாழ்க்கையை வாழ்பவன், துறந்தார் என்பவர் அனைத்தையும் துறந்தவர் ஆதலின் அவர்க்கு துணை மேலுலகத்தில் இருந்து கிட்டுவதில்லை. உலகில் இருந்தே கிடைக்கிறது. உலகியல் சார்ந்தே துறந்தாரும் வாழ வேண்டும் என்னும் சிந்தனை இங்கு பெறப்படுகிறது.

கடவுள் வாழ்த்துப் பாடலில் ஆதிபகவன் என்பது மூலப் பொருள் அல்லது சாங்கியம் குறிப்பிடும் பிரகிருதி என்னும் பொருள் காணப்படுகிறது. ஆதி என்பது மூலம் என்பதால் உலகிற்கு மூலம் என்பது பெருவெடிப்பினால் உருவான உலகம் என்று கொள்ளலாம். வானின்று வழங்கி வருதலால் தான் அமிழ்தம் என்றுணரற் பாற்று என்ற குறளானது வானிலிருந்து மழை பெய்வதால்தான் உலகமும் உலக மக்களும் நிலைத்து வாழ முடிகிறது என்று கூறுகிறது. இதில் மழை இல்லாமல் போனால் உயிர்கள் வாழ முடியாது என்னும் பொருள் அமைகிறது. இயற்கையில் அமைந்திருக்கும் இச்செயலினைக் கண்டு உணர்ந்தமையால்தான் தான் அமிழ்தம் என்று கூறுகிறார். முன்னால் நிகழ்வதைக் கண்டு உரைத்தல் என்பது உலகாயுதர் நோக்காகும். அதாவது பிரத்தியட்சமாவது. பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார் இறைவன் அடி சேராதார் என்ற குறளில் இறைவன் என்பது உயிர்கள் அடையும் துன்பம் குறித்தும் அதிலிருந்து விடுபடுதல் குறித்தும் கூறப்படுவதாகும். இறைவனை அடைதல் என்பது இங்கு இன்ப வாழ்வாகவும் உலக வாழ்வு துன்ப வாழ்வாகவும் கூறப்படுகிறது. இன்ப வாழ்வை அடைவதற்கு பிறவியைத் தவிர்த்தல் வேண்டும் என்று கூறப்படுகிறது. ஆனால் உலக வாழ்வையே துன்பமாகக் கருதுவதற்கு அடிப்படையாக மனிதரின் அனுபவம் காணப்படுகிறது. அவ்வனுபவம் என்பது உலகியல் சார்ந்ததாகும். இதற்கு மாறான இன்ப வாழ்வை அனுமானித்தல் என்னும் உலகாயுத நோக்கு இதில் வெளிப்படுகிறது. அது மேலுலகில் இல்லை. இப்பூவுலகிலேயே கிடைக்கும் என்பதை கம்யூனிச சித்தாந்தம் கூறும். அனுபவத்தால் தான் அடைந்த துன்பத்திற்கு மாற்றாக பிறிதொரு உலகை நினைத்துக் கொள்வதாகும். இது புறஉலக அனுபவம் இன்றி ஏற்படாத ஒன்றாகும். கூறும் செய்தியைக் காணமுடிகிறது. இடியும் மின்னலும் தோன்றுவதால்தான் பாறைகள் மண்ணாகின்றன. இயற்கையில் வளர்சிதை மாற்றங்கள் நிகழ்கின்றன என்பதை அறியலாம். அத்தகைய புலனுணர்வு அறிவையே இக்குறள் வெளிப்படுத்துகிறது. மழை பெய்யாது போனால் பூசைகளும் நடக்காது தெய்வங்களுக்கு வழிபாடும் நடக்காது (குறள்.18) சிறப்பொடு பூசனை செல்லாது வானம் வறக்குமேல் என்று கூறுகிறது. பூசைகள் செய்வதற்கும் மண்ணில் மழை விழ வேண்டும் இல்லையென்றால் மனிதர்கள் பூசையில் ஈடுபடமாட்டார்கள் என்று கூறுவதன் மூலம் மனிதர்க்கு இன்றியமையாதது கடவுள் அல்ல மழையே என்பது விளங்கும்.

நீத்தார் பெருமையில் உலகியல் அனுபவத்தால் நிலையாமையை உணர்ந்தவர்கள (குறள்;.21). என்று கூறப்படுகிறது. மனிதர் வாழும் வாழ்வில் நிலையாமை என்பது ஏற்படுகிறது என்பதை அனுபவத்தால் உணர்ந்து அதற்கேற்ப ஒழுக்கத்தைக் கைவிடாதவர் என்று பொருள் கூறப்படுகிறது. ஒழுக்கத்தைக் கைவிடாதது என்பது அறமயப்படுத்தும் செயலாகும். அனுபவமே ஒருவர்க்கு அதனை உணர்த்தும். சடப்பொருள் உண்மையே அதனை தெளிவிக்கும். அறத்தைக் காட்டிலும் மனிதர்க்கு மேம்பட்ட பொருள் கிடையாது (குறள்.31) என்றும் அறத்தைச் செய்யாதிருப்பதை விட அழிவது மேல் (குறள்.32), தன்னால் இயன்ற அளவு அறம் செய்ய வேண்டும் (குறள்.33) போன்ற குறள்கள் மனிதர்க்கும் அவர் ஈட்டிய செல்வத்திற்கும் அவர் செய்யும் அறத்திற்குமான தொடர்புகள் காணப்படுகின்றன. இவை யாவும் உலகியல் சார்ந்த சிந்தனையின் விளைவாகும். தவம் என்னும் அதிகாரத்தில் உற்ற நோய் நோன்றல் உயிர்க்கு உறுகண் செய்யாமை அற்றே தவத்திற்கு உரு (குறள்.261) என்ற குறள் தனக்குற்றத் துன்பத்தை தானே அடைதல் என்று கூறப்படுகிறது. தனக்கு நேரும் ஊறினை பிறர்மேல் சாட்டாமல்

தானே ஏற்க வேண்டும். அல்லாமல் இதற்கு விதி காரணமென்றோ பிறர் காரணமென்றோ கூறக்கூடாது என்பது பெறப்படுகிறது. உலக நிலையாமை என்பது உலகியல் சார்ந்த அறிவின்பாற்பட்டதாகும். உலகில் தோன்றுவதால் மூப்பும் பிணியும் இறப்பும் தோன்றும் என்பது இயல்பாகும். இதை உணர்ந்தவர்கள் தீங்கு செய்வதைத் தவிர்ப்பர். இதுவும் பௌத்தத்தின் அறமயப்படுத்தும் செயலாகக் காணப்படுகிறது. இவ்வுலகில் அல்லாது வேறு உலகைப் பற்றிய சிந்தனைகள் குறளில் காணப்படுவதில்லை.

தீயினாற் சுட்டப் புண் உள்ளாறும் ஆறாதே நாவினால் சுட்ட வடு என்னும் குறள் உவமைக்காகக் கூறப்பட்டதெனினும் தீயினால் சுடுதல் என்னும் அனுபவ அறிவு கூறப்படுகிறது. புகை தோன்றுமானால் அங்கே தீ இருப்பது தின்னம் என்னும் அனுமான அளவைக் கோட்பாடாக இது வெளிப்படுகிறது.

திருக்குறளில் இயற்கை இகந்த ஆற்றல் குறித்த சொற்கள் பல பயின்று வந்துள்ளன எனினும் அவை உலகியல் சார்ந்த அனுபவ அறிவின் மூலம் பிறிதொன்றை மனதில் கற்பனை செய்து கொள்ளல் என்னும் தன்மையில் வெளிப்படுவதாகும். கொல்லாமை மேற்கொண்டு ஒழுகுவான் வாழ்நாள் மேல் செல்லாது உயிர் உண்ணும் கூற்று' (குறள்.326) இக்குறள் மனிதரை மனிதர் உண்டு வாழ்ந்த மனித நாகரிகத்தை சுட்டுவதாக அமைகிறது. கூற்றுவன் உயிர் உண்ணும் என்பதில் மனிதரின் நாகரிக வளர்ச்சியில்தான் பிற உயிர்களைக் கொல்லக் கூடாது என்பதை கடைபிடித்தனர். பிற உயிர்களை கொன்று உண்ணும் நிலை மனிதரைக் கொன்று உண்ணும் நிலைக்கு கொண்டு செல்லும் ஆதலின் அத்தகைய செயல் நாகரிகமற்றது என்பதை எடுத்துக்காட்டுவதாக அமைகிறது. எனவேதான் மனித இனம் நிலைத்து நிற்க பிற உயிரைக் கொலை செய்வதற்கு நேரிடுமானால் தன் உயிர் போனாலும் அதனைச் செய்யக் கூடாது என்று (குறள்.327) கூறப்படுகிறது. உயிர் கொலை என்பது காலங்காலமான நடைபெறுகிறது. அதனை நிறுத்தல் வேண்டும் என்பதையே இது காட்டுகிறது.

ஊழ் என்பது வினையின் பொருட்டு விளைவது எனக் கொள்ளலாம். இது அடிப்படையில் வினைக்கு எதிர்வினை என்னும் அறிவியலின்பாற்பட்டதாகும். பந்தை எறிந்தால் அது திரும்ப வரும் என்பது போல் எந்த வினைச் செய்தாலும் அதற்கான பலன் கிடைக்கும் என்பதை அடிப்படையாகக் கொண்டது. முயற்சியே செலுக்கு ஆக்கம் தரும் என்பதை ஆகு ஊழ் என்ற சொல் (371) குறிப்பிடுகிறது. அறிவைப் பயன்படுத்தாத இடத்து ஒருவனுக்கு அழிவு நேரும் (372) என்று கூறப்படுகிறது. புறவாழ்வில் ஒருவன் பெறுகின்ற அறிவிற்கு நிகரானது வேறொன்றில்லை என்பதை "நுண்ணிய நூல் பல கற்பினும் மற்றும்தன் உண்மை அறிவே மிகும்" (குறள்.373) என்ற குறள் சுட்டுகிறது. நூல்கள் பல கற்றாலும் அனுபவத்தின் மூலம் பெறுகின்ற அறிவே ஒருவனை செயற்படுத்தும். இதில் உலகாயுத செயல்பாடு காணப்படுகிறது. உலகியல் சார்ந்தே மனிதர்கள் வாழ முடியும் என்பதால்தான் அருளில்லார்க்கு அவ்வுலகம் இல்லை. பொருளில்லார்க்கு அவ்வுலகம்தானும் இல்லை என்று கூறுகிறது குறள். பொருள் என்னும் அதிகாரத்தில் மனிதர்கள் பொருளிற்குத்தர வேண்டிய முக்கியத்தும் உரைக்கப்படுகிறது. பொருள் இல்லாத ஒருவனை இவ்வுலகம் மதிக்காது என்பதையே சுட்டுகிறது. எனவே பொருள்தான் முதன்மையானது. உழவு என்னும் அதிகாரத்தில் உழவுத் தொழிலின் மேன்மை கூறுவதன் வழி மனிதர்கள் மண்ணில் விளையும் பொருள்களை நம்பியே இருக்கின்றனர் என்பது கூறப்படுகிறது. இன்பத்துப் பால் பாடல்கள் அனைத்தும் ஆண், பெண் உறவு நிலைகளில் இன்ப வாழ்வினை அடிப்படையாகக் கொண்டது. உலகாயதரின் நோக்கே இன்ப வாழ்வு என்று எப்பிக்கூரசு கூறுவதைக் காணலாம்.

## முடிவுரை

இவ்வாறு தமிழிகத்தில் சமண, பௌத்த, சார்வாக, ஆசீவக தத்துவக் கருத்துக்களின் அடிநாதமாக உலகாயுதம் காணப்படுகிறது. அது போல ஐரோப்பிய மரபில் உலகாயதச் சிந்தனையானது பகுத்தறிவு வாதம் எனப்படுகிறது. அறிவியலுக்கே முதன்மையளித்து உலகைப் பற்றிய சிந்தனைகளை வெளிப்படுத்தினர். அறிவுவயப்படும் போது கடவுள் கடந்து போவதை உணரமுடிகிறது. உலகாயதர் கூறிய சடப்பொருள் உண்மையே உண்மை என்னும் நோக்கில்தான் திருக்குறளின் பல்வேறு பாடல்கள்

காணப்படுகின்றன. தமிழின் தத்துவங்கள் அனைத்தும் உலகாயுதத்தை முன்னிறுத்துகின்றமைக்கு திருக்குறள் சான்றாக அமையும் எனலாம்.

## References

Kandasamy, SN. (2005) Thathuva Nokkil Tamil Ilakkiyam, Meyyappan Pathippagam, Chennai, India.

Makendran, C. (2019) Arivu Patriya Tamilarin Arivu, Discovery Book Palace, Chennai, India.

Rajadurai, S.V (2011) Iruthaliyamum Marsisiyamum, Vidiyal Pathippagam, Coimbatore, India.

Vasanthakumar, M. (2010) Pekkan muthal Marks varai, Vidiyal Pathippagam, Coimbatore, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License